# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலைப் பீடம்
### முதலாம் வருடக் கலைமாணிப் பரீட்சை - அரையாண்டு - II – 2023/2024

## SOC 1203 - இலங்கைச் சமூகத்திற்கு அறிமுகம்

நேரம் : இரண்டு (02) மணித்தியாலங்கள்

நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடை அளிக்குக.

---

1. இலங்கைச் சமூகவியலின் வரலாற்றின் பிரதானமான படிநிலைகள் எவை? உதாரணங்களுடன் விளக்குக.

2. இலங்கைச் சமூகம் இன்னும் வகுப்பு முறைமைக்கும் மேலாகச் சாதி முறைமையினை பெறுமதிமிக்கதாகக் கருதுகின்றதா? உதாரணங்களுடன் விளக்குக.

3. சமகால இலங்கைச் சமூகத்தில் திருமணம் மற்றும் உறவுமுறைகள் பிரதான வகிபங்கினைச் செலுத்துகின்றதா? விளக்குக.

4. ஸ்டான்லி தம்பையாவின் (Stanley J. Tambiah) கூற்றான வதந்திகள் மற்றும் அரசியல் தலையீடுகள் தெற்காசியாவில் இனத்துவ முரண்பாடுகளைத் தூண்டிவிடுவதில் பிரதான வகிபங்கினைச் செலுத்துகின்றது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா? இலங்கையிலிருந்து உதாரணங்களுடன் விளக்குக.

5. பின்-காலனித்துவ இலங்கையில் இலங்கை மக்களைப் புலம்பெயரத் தூண்டும் சமூக மற்றும் பொருளாதாரக் காரணிகள் யாவை? விளக்குக.

6. சுதந்திர வர்த்தக வலயங்களில் (FTZ) நிறுவப்பட்ட ஆடைத் தொழிற்சாலைகளைக் கருத்திற்கொண்டு உலகமயமாக்கம் எனும் எண்ணக்கருவினை விளக்குக.

7. இலங்கையில் பால்நிலைத் தொடர்புகளில் அண்மைக்கால மாற்றங்களை ஏற்படுத்துவதில் கல்வியின் பங்களிப்பு யாது? உதாரணங்களுடன் விளக்குக.

8. பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டிற்குச் (02) சிறு கட்டுரை எழுதுக.

   i. நில உரிமை
   ii. பல்-மதத்துவம்
   iii. தாய்வழி மற்றும் தந்தைவழித் திருமணங்கள்
   iv. அகமணமுறை மற்றும் புறமணமுறை

************************